விலை சதம் 75 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 12 ஸபர் 29 இதழ் 315
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-12-81

பண்டத்தரிப்பு விவசாயிகளுக்கு
ரூபா $1\frac{1}{4}$ லட்சம் உதவி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். கி. ஏ. தமது பகுதியிலுள்ள ஏழை விவசாயிகளினதும் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள படித்த இளம் விவசாயிகளினதும் விவசாய அபிவிருத்திக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை செலவிடவுள்ளது

ஆசிய இளைஞர் அபிவிருத்தி நிதி நிறுவனம் பண்டத்தரிப்பு வை. எம் கி. ஏ. இயக்கத்திற்கு அண்மையில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிதி மூலம் இரண்டு கிலு உழவு யந்திரம் கிருமி நாசினி தெளிக்கருவிகள் ஆகியனவற்றை கொள்வனவு செய்து தமது பகுதியிலுள்ள விவசாயிகளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விதை வெங்காயம், விதை நெல், உரவகைகள் கிருமி நாசினி என்பனவற்றை வாங்குவதற்காக நம்பிக்கையாள விவசாயிகளுக்கு கடனாக நிதி உதவி அளிக்கவும் வை. எம். கி ஏ; நிர்வாகம் முடிவு செய்திருப்பதாக அதன் செயலாளர் ஆசிரியர் எஸ். இரத்தினவேல் தெரிவித்தார். (ஈ)

மானிப்பாய் கல்லூரி ரசாயனபொருள் கொள்ளை:
இராணுவப் பாதுகாப்பில் மூன்று இளைஞர்

[யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆய்வு கூடத்தில் இரசாயனப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமாக தெல்லிப்பளையைச்சேர்ந்த மூவர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு இராணுவ விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்திலிருந்து இரசாயனப் பொருள்கள் களவுபோனது சம்பந்தமாக கடந்த சில தினங்களாக பலர் பொலிஸ், இராணுவ விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர். சந்தேகத்தின்மீது மூவர் கைது செய்யப்பட்டு இப்பொழுது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மாதம் இருபதாம் திகதி நள்ளிரவு மானிப்பாய் இந்துக்கல்லூரி இரசாயன ஆய்வு கூடம் உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான இரசாயனப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த வியாழக்கிழமை சண்டிலிப்பாய் கல்வயலிலிருக்கும் ஒருவருடைய வீட்டு வளவிலிருந்து இரசாயன ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் சில உபகரணங்கள் உடைந்த நிலையில் கைப்பற்றப்பட்டது. இந்த உபகரணங்களை காங்கேசன்துறைப் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக பொலிஸ், இராணுவ புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

துப்பாக்கிமுனையில் தாலிக்கொடி கொள்ளை

(யாழ்ப்பாணம்)

ஏழாலையைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை மரியதாஸ் என்பவரின் வீட்டில் துப்பாக்கி முனையில் நேற்று தாலிக்கொடி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைக் கேக்ஷ்டியினர் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கி, வாள் ஆகியவற்றைக் காட்டி பயமுறுத்தி வீட்டுச் சொந்தக் காரரின் மனைவியின் தாலிக்கொடியை அபகரித்துச் சென்றதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

கன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சுருணேந்திரன் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா பொலிஸ் கான்ஸ்டபிள்களான எஸ். மாகலிங்கம் கே. கந்தசாமி, பி. குணசிங்கம் ஆகியோர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

சிறையில் சித்திரவதை

வார்கோ டிச 26

பாலந்து சிறை ஒன்றின் சிறிய அறையில் 300 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள்மீது ஒரு மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை குளிர் நீர் ஊற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவச் சட்டம் அங்கு அமுல் செய்யப்பட்ட பின்னரே இச்செயல்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

இராணுவப் பிரகடனம் சரியானதே!

புடாபெஸ்ட், டிச 26

போலந்தில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது சரியானது என்று ருமேனியா அரசு அறிவித்துள்ளது.

போலந்து நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட ருமேனியா விரும்பவில்லை என்று தெரிவித்திருக்கும் ருமேனிய அரசு குறிப்பு; இன்றைய சூழ்நிலையித போலந்து இராணுவச்சட்டம் அவசியமானதே என்று வலிபுறுத்தியுள்ளது.

போலந்து நெருக்கடி

கம்யூ. தலைவர்களுடன் கத்தோலிக்க தலைவர்கள் பேச்சுவார்த்தை

வார்ஸோ, டிச 26

போலந்தில் நிலைமை ஓரளவு திருந்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் இங்கு பற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்துவைக்க கத்தோலிக்க திருச்சபைத் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கத்தோலிக்க திருச்சபைத் தலைவர்கள் போலந்து நாட்டின் முக்கிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களுடன் சமரச பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதே நேரத்தில் நேற்று நத்தார் பண்டிகையை மக்கள் இங்கு அமைதியாகக் கொண்டாடினர்.

இங்: 9 - 476
இந்தியா 3 – 172

புதுடில்லி, டிச 26

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெறும் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் ஒன்பது விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 476 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து இந்தியா ஆடத்தொடங்கி ஆட்டநேர இறுதியரை மூன்று விக்கட்டுகள் இழப்புக்கு 172 ஓட்டங்கள் எடுத்தன.

பஸ் விற்பனைக்கு

C.T.B. பஸ் 'பொடி' அமைப்புடன் கூடிய 33 ஆசனங்களைக் கொண்ட பஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முருகாபுரி ரூர்ஸ், இல.4 சந்தன மாதா கோவில் வீதி, சுண்டிக்குளி. 1825

"பாரதி கவிஞன் மட்டுமல்ல அவன் ஒரு தீர்க்கதரிசி
பாரதி விழாவில் கருத்து

(மாவிட்டபுரம்)

"எத்தனையோ கவிஞர்கள் இருந்தும் பாரதிக்கு இவ்வளவு மதிப்பு ஏற்படுவதற்குக் காரணம் அவனது கவிதைகள் மக்களது மனோநிலையைப் பிரதிபலித்ததுதான். வங்கத்தில் தாகூர் போன்று பாரதத்தில் பாரதி விளங்கினான். பாரதியை கவிஞன் என்று மட்டுமல்ல ஓர் தீர்க்கதரிசி என்று கூறினாலும் மறுப்பதற்கில்லை"

இவ்வாறு ஏழாலை மத்திய சனசமூகநிலையம் பாரதி நூற்றாண்டையொட்டி நடத்திய பாரதி விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றிய பாம். [illegible] விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் கூறினார்.

சனசமூக நிலைய முன்றலில் ஏழாலை கிராமசபை முன்னாள் தலைவர் திரு. க. சிவகுரு தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற பல பெரியார்கள் வாழ்ந்து சைவமும், தமிழும் வளர்த்த ஏழாலையில் பாரதிக்கு விழா எடுப்பது சாலவும் பொருத்தமானது மட்டுமன்றி அரசியல் கலப்போ அரசாங்க செலவோ இல்லாமல் நடத்தப்படும் முதல் விழா என்ற பெருமையையும் இவ்விழா பெறுகிறது.

"பாரதி நூற்றாண்டு விழாக்களை இன்று நாம் கொண்டாடுகிறோம். இந்த நூற்றாண்டு மட்டுமல்ல இன்னும் பல நூறு ஆண்டுகள் பாரதியின் கவிதைகள் சிறப்புற்று விளங்கக் கூடியன. பாரதத்துக்கு பாரதி போன்றதோர் கவிஞர் தேவைப்பட்டபோது அவர் உதயமானார், மற்றைய கவிஞர்களது கவிதைகளை விட அவரது கவிதைகள் மக்கள்மனதில் சிந்தனையை தூண்டிவிட்டன கவிதை எழுதுவதற்கு எவ்வித ஆயத்தமும் செய்யாது சுயமாகவே உயிர்த்துடிப்புள்ள கவிதைகளையாத்தவன் பாரதி. பாரதியின் கவிதைகள் என்றும் நம் மத்தியில் சிறப்புத்து விளங்குமென்பதில் ஐயமில்லை" என்றார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் உட்படப்பலர் பேசினர்.

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். தேவி தாமதம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்றுப் பகல் புறப்பட்ட 'யாழ்தேவி' நேற்றிரவு இரண்டுமணி நேரம் தாமதித்து யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தது.

கோட்டையிலிருந்து நேற்று பகல் 11-55க்கு புறப்படவிருந்த 'யாழ். தேவி' ஒரு மணி நேரம் தாமதித்தே புறப்பட்டது.

2ம் எதிரிக்கு அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமின்றி லொறியில் கள் கடத்தியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் 2-ம் எதிரிக்கு 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சீ. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இயற்கை அன்னை தந்த வளங்களை விடுத்து வெளிநாடு செல்வதேன்?

இயற்கையின் [illegible] இயற்கை அன்னை தந்த வளம் [illegible] புள்ளது. [illegible] தேவைகளை [illegible] ஞாயகரமாகக் கற்பதருவைக் கொண்டு இலங்கையில் நாட்டி வள [illegible] சோதசுகி கொண்டாடி மூன் ஏன்பர் இரம்முடைய [illegible] டாபிஷேகத்தின்று பதி னாங்கு பொற்பணைகளை இலங்கை மன்னன் விபூஷணன் தனது சம்மானமாக வழங்கி னான் என இராமாயணத்தை கூறு கிறது. கிரஞ்சிலி அனுமான் மூலமாக மல்லூர் தன்னாடியி லும். பாழ் நெடுந்தீவிலும் முளிகை வளங்களை தந்தனி குடையீ. தென்மராட்சியில் வளங்கமிக்கவரை தாய்மையான வெண் மணலையும். இராச யபிர் தென்னை யையும், வளினி நாகும் வீரும் ஆமையு முடைய நாளைகளையும். பால் சொரியும் பசுக்களையும். சளக் காது களைக்காது வளங்களை ஊழுவதற்கும் பரந் படித்துத் தரும் எருமைக் கடாக்களை ஏர் சால் நிறைய மாக் கொழிக்கும் மேற்களையும் கட ராடசியி செல்வம் கொழிக் னும் கடல் வளத்துடன் சிற்ப கை காடுகளையும் புகையிலைப் புலிகளையும் ஆதவனின் கடுமை நோகினையும் வலிகா ய்ந்தின் நாற்றிகையும். நாலு வித வளத் தரு மண்ணையும் நிறப்பாக ஆக்கினி செறி செம்மண்ணையும் கொடுத்த வியதுடன். முருகைக்கற்பாறை களையும், ஆல் ஆன்னையையும் இன்னும் ஆநேக மூலவளங் களையும் தந்து தன் மக்களின் நன்மைக்கு வழிவகுத்துள்ளான் இயற்கை அன்னை.

ஆலைகள் ஆக்குவோம்

இற்கைக்குக் கிடைத்தற்கரிய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த வளமான செல்வம் கொழித்த இலங்கையை அந் நியரிடமேயடிமை ஆகுமாறு தாக வந்த ஆங்கி எழிலிலும் செழிப்பிலும் மயங்கி நாம் எடுத் ஈப்பற்றிமதுடன் தமது தாகரீகத்தையும். தம் தேசநடை யுடை பாவனைகளை யும் எம்மிடையே புகுத்தினர். பல்லாண்டு மக்கி அழிந்தவற்றை டாம்பீகத்திற்கும் மணத்திற் கும் ஏற்றது. நவீன ஆங்கர மிக்குப் பயந்தும். அடிமை களாகவும். சோம்பேறிகளா கவுமாயினர். வருவாய் தந்த கிசாபத்தையும் - பயன்தந்த காதொழிலாளியும் குறிப் பேசவிட்டனர். பொருள்விற் னதையே குறிக்கோளாக கொண்ட கிழந்தேச வர்த்த கர் தம்மனிசர் இலங்கையின் தேயிலை, றபர், தெங்கு, கராம்பு, கறுவா, ஏலம், மிளகு ஆனைத்தந்தம், இரத்தினம்: முத்து ஆகிய இயற்கைப் பொருள்களை ஏராளமாகவு மாக் கப்பலிலேற்றிச் சென்றனர் அவற்றிற்குப் பல தரப்பட்ட பொருள்களாக்கிப் பல தேசங் களுக்கும் அனுப்பிப் பெரும் பொருளை ஈட்டியது டன் எம்மக்களை பணத்தி னால் குவித்துக் கப்பலேற்றி னர்.

ஈழத்துணவுத் தானத்தால் சிறும் எனப் பலரினப்பாலி யின் கூற்றிற் கிணங்க உண வுப் பொருள்களைப் பிறநாடு களிலிருந்து ஏற்றிய நாம் இன்று உணவுப் பொருள்களை அரிய கப் பெரிய எரிர் காக்கவேண்டிய நிலையிலுள் ளோம்.

இயற்கைத் தேயிலை தரமாக வும் நிறமாகவும் அமைந்துள் ளமையினால் மற்றைய நாடு களுடன் போட்டி போட்டுக் கூடி பதாக அமைந்துள்ளது. மற் றைய தப்பும் தென்னையும் மற்றைய நாட்டினால் உலகச் சந்தையில் இலகுவாகவில் நிலை யாய தன்மையினையாக் கூடியும் குறைந்தும் தோட்டத் தாரரை இடமுறச் செய்கின் றது.

மூன்றுமிடத்தைப் பெற்று வந்த தென்னை இயற்கையின் சிற்றத்தாலும். தொற்று நோய்களாலும். செய்கையா ளரின் உதாசீன தாலும் மனம்குன்றி விட்டது. எம் முன்னோர் தேங்காயை இட றித் தின்றும் நிலையிலிருந்தும் அரைத்து எண்ணாக் சேர்த் துண்டு சுகதேகிகளாக வாழ்ந் தனர். நாம் தூரிக கிடை கொடுத்து தேங்காய் வாங்கி உண்டு. பிணியும் கடனும் பட்டு உலுத்திருக்கிறோம்

தென்னை நிறைந்த தென் மராட்சியில் தொழிலாளர் ஆதி பனனுறு பொருளாதா ஆதிக்கை கலை மக்களுக்கு முயற்சியையும் நிறைந்த வழ யையும் கண்கொடுத் நம். மேலும் தூய்மையான வெண்மணலை மலபோல இயற்கைத் தாய் தந்து கவி யுள்ளார். இதனைக் கொண்டு கணிப்பெருக்களை ஆக்க முன்வருவாமேயானால் எம் நாடு தொழிற்சாலை ஆக்கிதரு முன்வருவார்களானால் யாழ். மாவட்டப்பாதைன் செல்வச் சீமாளாத் திழ்வாள் என்ப தற்று ஐயமுண்டோ.

கடகிபாக யாழ்ப்பா ணத்தை ஆண்ட முதலாம் சங்கிலி மன்னன் ஒல்லாந்த ருடன் போரிட்டு ஆறிருது நாயக்கவேலி இராசவீதி வழியாகக் கோப்பாய்க்கு ஓடி ஆதிருள்ள கோட்டையில் தங்கியிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன அந்தக் கோட் டையின் இடிபாடுகளே இன்றும் கோப்பாயில் காண லாம். இக்கோட்டையின் தெற்குப்புற வாசல் நல்லூர் நாவன்மார்கட்டு வரையும் நீண்டு பரந்துள்ளது என்ப தற்கும் நாவன்மார்கட்டில் ஓர் பகுதி வரை வெளியைக் கோட்டைவாசல் எனும் அழைப்பதைக் கொண்டும் செக்கல் இடிபாடுப்பிட்டி களைக் கொண்டும் உணரலாம். இக்கோட்டையின் ஓர் புற மான மூன்று வைகளும் மேற் உண்டாயின் இதன் விஸ்தீரணத்தையும் பாவிக்கப் பட்டுள்ள செங்கற்களையும் ஒடுகளையும் எவ்வளவு தொகை யாகவிருக்கும் என ஊகிக்க லாம். அன்றுபோல் இன்றும் தொழிற்சாலைகள் ஆக்க முன் வாரீர்.

ஏர் மன்னர்களின் சமயோசிதம்

அந்த நாளில் ஏர்மன்னர் களின் சமயோசித புத்தியை விளக்கும் ஓர் கண வரலாற்று சுருக்கத்தையும் இங்கு குறிப் பிட விரும்புகிறேன்.

பண்டைய தமிழ் மன்னர் கள் அந்நாளைய இறை யிலி நிலங்களை மானியமாக வழங்கியதுடன் தண் வரியை யும் நீக்கியிருந்தனர். தண்வரி கட்டாத விளைநிலி ஒருவர் வயல் உழுதுகொண்டு இருக் கும் போது வரியற்றிருந்த ஆராய்ச்சியுற்று 'நீ ஏன் இவ் னுடைய கொடுக்கவில்லை நடவும் சரிசேரிக்கு என உருட்டிமிரட்டினார் 'நான் மாப்பாண துரையே. பரப்பா னுக்கு வரியுமுண்டோ?' என் றான் சாமி 'என்ன சொல்லி விடுகிறாய் எங்கே உனது பூநூல்?' என்றார் ஆராய்ச்சி. தனது உணர்ந்து கொண்ட வியசாமி. சமயோசித மாகத் தனது அரைநூலைக் காட்டினான். என்ன பாப்பா ரை பூநூலைக் காணவில்லை போட்டிருப்பாரிளே நீ அரை யில் கட்டியிருக்கிறாயே என் றார் ஆராய்ச்சி. 'துரையே அரைவேளாளர் தொடுபாப் பார்; நான் உழுபாப்பான் எனக்கூறித்தப்பித்துக் கொண் டான் விசாயி.

(தொடரும்)

விசேட சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

யேசுகிறிஸ்து நாதரின் ஜனத்தி னிழாவை முன்னிட்டு விசேட சொற்பொழிவு இன்று பிற்பகல் 4-30 மணிவளவில் திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியிலுள்ள பரமஹம்ஸ ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதி மண்டபத்தில் நடைபெறும்.

பரமஹம்ஸ ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி யில் டாக்டர் ஏ. ஜே. வில் சந்திரகாந்தன் உரையாற்று வார். (இ)

மக்கள் கருத்து

நேரில் அவதானித்து நடவடிக்கை எடுக்கவும்

காரைநகரிலிருந்து யாழ்ப் பாணத்திற்கு நவாலி ஊடாகச் செல்லும் பிரதான வீதியில், மணிமண்டபத்திற்கு அருகே மழைவெள்ளம் பாய்ந்து செல்வதற்காக வாய்க்கால் வெட்டப்பட்டு பல போக்கு வரத்து கில நாட்களாகவும் பிரதம அடைந்திருந்தது.

இந்த இடம் ஏற்கனவே மழைவெள்ளம் செல்ல ஏது வாக விளைவாக விடப்பட் டிருந்தது.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேம தாசாவின் வருகையை அடுத்து இப்பிரதேசத்திலுள்ள மூடப் பட்டிருந்த வாய்க்கால் பகுதி அவசரமாக அகற்றப் பட்டது. அதனால் ஏற் பட்ட பாதிப்பு அவசரமாக சீர்செய்யப்பட்டது.

ஆனால் இப்பிரதேசத்தில் வாழும் பலதரப்பட்ட மக்களும் தமது பிரச்சினைகளை நேரில் அவதானித்து உடனடி நட வடிக்கை எடுக்கவேண்டும்.

வி. நிரஞ்சன்
(செயலாளர்)
நவாலி வடக்கு
அபிவிருத்திச்சங்கம்

"ஏன் ராஜினமா செய்தேன்?"

நெவில் விளக்குகிறார்

[தொடர்ச்சி]

பாராளுமன்றத்தில் தனது வெளியேற்ற கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து வாக் களித்த பல எம் பிக்கள் முன் வந்தார்கள் இந்நிலையில் அவர் களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு விஷயங்கள் ஏதும் நடந்துவிடக் கூடாதென்ப தற்காகவே நான் ராஜினமாச் செய்துகொண்டதாக பாணந் துறை முக்குரல் எம் பி டபிழட் நெவில் பெரணாண்டோ தெரிவித்தார்.

டாக்டர் நெவில் பெர் ணாண்டோ பாணந்துறை தொச்சேறை போது பாணந் துறைத் தொகுதி நிலையத்தில் வர வேற்பளித்து நகர வீதிவில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

தன்னை எம் பி களாகத் தெரிவுசெய்த மக்களை ஏற் விட்டதான நினைவு ஏற் டபோதெல்லாம் தொழுபாப் பாரி முதலாளியிடமே

தான் ராஜினமா செய்த போதிலும் தனக்கு ஆதரவு தந்த பாராளுமன்றசகாக்களுக்கும் பிரதமருக்கும் ஆலோசனை செய்த பின்னரே ராஜினமா முடிவை மேற்கொண்டதாகவும் அவர் தெரி வித்தார்.

பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்ட எம் பி க்கள் அடுத்தடுத்த தொடர்ச்சியாக இடைத்தேர்தல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தான் ராஜினமா செய்ததாகவும் அவர் தெரி வித்தார்.

திருமதி உண்டாரநாயக்கா அரசியலில் மீண்டும் பிரவேசிப்பதை தடுக்கவே இம் முயற்சி மேற் கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். (i-i)

பாக்.குடன் 'நல்லுறவே இந்தியாவின் கொள்கை

இந்திரா மீண்டும் வலியுறுத்துகிறார்

புதுடில்லி, டிச. 26

பாகிஸ்தானுடன் சிறந்த நட்புறவு கொள்வதே இந்தியாவின் கொள்கையும் நம்பிக்கையுமாகும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: 1971-ம் ஆண்டு போருக்குப் பின்னர் ஒரே தரப்பாக இந்தியா போர் நிறுத்தம் பற்றி அறிவித்தது.

போர் விலக்கல் என்ற வார்த்தையை பாகிஸ்தானியர் விரும்பவில்லை என்று முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோ கூறினார். இதனாலேயே சிம்லா ஒப்பந்தத்தில் போர் விலக்கல் பற்றிய வாசகம் எதுவும் குறிப்பிடவில்லை. [இ]

கொள்ளையரை அடக்க

உ. பி. பொலிசாருக்கு கொமாண்டோ பயிற்சி

லக்னோ, டிச. 26

உத்தரப் பிரதேசத்தில் கொள்ளைக்காரர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களில் பொலிசாருக்கு கொமாண்டோப் பயிற்சி அளிக்கப்படும்.

இவ்வாறு உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் லக்னோவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் கொள்ளைக்காரர்களின் அட்டகாசத்தை முறியடிப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிசாருக்கு கொமாண்டோ பயிற்சி அளிப்பதற்கு ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவத்தினர் சேவைக்கு அமர்த்தப்படுவர் என்றும் முதல்வர் கூறினார். [ஐ]

பாதுகாப்பு செலவை ஜப்பான் அதிகரிக்கிறது

டோக்கியோ, டிச. 26

ஜப்பான் அடுத்த ஆண்டு பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க உள்ளது.

இத்தகவலை ஜப்பானியப் பிரதமர் திரு. சுசுகி தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அடுத்த ஆண்டில் ஜப்பான் நவீன யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்ய இருக்கிறது என்றும் திரு. சுசுகி தெரிவித்தார்.

சோவியத் யூனியனுக்கு எதிராக ஜப்பானின் படைபலத்தை அதிகரிக்குமாறு அமெரிக்கா கேட்டுக்கொண்டதன் பேரிலேயே ஜப்பான் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக டோக்கியோ செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

போலந்து விவகாரம்

றீகன் - சிமித் பேச்சு நடத்துவர்

வாஷிங்டன், டிச. 26

மேற்கு ஜெர்மன் தலைவர் திரு. சிமித் அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகனுடன் போலந்து விவகாரம் குறித்து பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளார்.

அமெரிக்காவின் தீவு ஒன்றில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் திரு. சிமித் ஜனவரி மாதம் 5ம் திகதி திரு. றீகனுடன் பேச்சு நடத்துவார்.

திரு. சிமித் அண்மையில் சோவியத் அதிபர் திரு. லியோனிட் பிரஷ்னேவுடனும் பேச்சு நடத்தியிருந்தது தெரிந்ததே.

திரு சிமித்தும் திரு. றீகனும் கிழக்கு மேற்கு உறவுகள் மற்றும் சில சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

வேலைகள் துரிதம்

(சாவகச்சேரி)

பூநகரி ஜனசேவா தாம் போதி பாலவேலை இரதான அடிப்படையில் மிகவும் துரிதமாக நடைபெறத் தொடங்கியுள்ளது. அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா பூநகரிக்குச் சென்று உதவி அரசாங்க அதிபர் அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆகியோரைச் சந்தித்து இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

பல பொதுமக்களும் கமநல உத்தியோகத்தர் உரிமையாளர்களும் இதில் ஈடுபட்டுள்ளதால் தாம் போதி வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. (ஸ)

சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் சிறப்புக்கூட்டம் இன்று காலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவரும், முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவருமான திரு. எம். சமீம் ரப்பின்ஸ் "இன்றைய சோதிடப் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

'தமிழன் தமிழனாக வாழவேண்டுமானால்

தமிழகத்தை தமிழன் ஆட்சி செய்ய வேண்டும்'

மாவட்டசபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

"இந்திய நாட்டில் தமிழ் மொழி அல்லோலகல்லோலப்படுவதற்குக் காரணம், எங்களுக்கு அரச உரிமை இல்லாததுதான்" என்று யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏழாலை மத்திய சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராக திரு நடராசா கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஏழாலை முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு க. இ. தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு நடராசா தொடர்ந்து பேசுகையில் இந்நாட்டில் தமிழ் மொழி அழிக்கப்பட்டு வருகிறது. இதை நாங்கள் இன்றைவரை தடுக்க வேண்டும்.

மகாகவி பாரதியார் பாடியது போல் சேமமுறத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்யவேண்டுமானால், தமிழன் உலகமெல்லாவற்றையும் ஆட்சி புரிய வேண்டும் என்று சொன்ன அவர், பாரதியாரின் உள்ளக் கிடக்கையை இது காட்டுகிறதென்றும் விளக்கினார்.

"பாரதியார் 15 வயதிலேயே அறிவு, அனுபவம் மிகுந்த பண்டிதர்களுடன் சொற்போர் புரிந்தது சக்தி உபாசனையினால் உண்டான கொண்டிருந்ததால், இந்த தெய்வ பக்தி எமக்கு அத்தியாவசியம் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறதென்றும் திரு நடராசா குறிப்பிட்டார்.

"தமிழன் தமிழனாக வாழ வேண்டுமென்றால் தமிழகத்தை தமிழன் ஆட்சி செய்ய வேண்டியது அவசியம்" என்றும் அவர் சொன்னார்.

கலைநிதி க. சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வாசகர் கூத்தும், சமூக நாடகமும் நடைபெற்றன. [மா]

இலங்கையில்

லேலன்ட் அசோக்லேலண்ட்

(கொழும்பு)

இலங்கையில் மோட்டார் வாகன உற்பத்தி செய்வதற்கு லேலண்ட் கம்பனிக்கும், இந்தியாவின் அசோக்லேலண்ட் கம்பனிக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்விரு நிறுவனங்களும் மோட்டார் வாகன உற்பத்தி செய்யும்பட்சத்தில் பொருளாதார நிலைமை 25 வீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

சேமிப்புத் தொகை அதிகரிப்பு

(இருபிட்டி)

வேலணை இலங்கை வங்கியின் தேசிய அறக் கொடைத் திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சேமிப்பில் இடப்பட்டுள்ளதாகப் பிரவுந்தர வங்கி முகாமையாளர் திரு. வீ. சின்னராசா தெரிவித்தார். [அ]

எட்டுத தவணைகளுக்கு

நீதிமன்றம் வராத எதிரிகளுக்கு தலா 300 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

நீதிமன்றத்தில் 8 தவணைகளுக்கு ஆஜராகாத 4 எதிரிகளுக்கு தலா 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் வரணியைச் சேர்ந்த சி. சிவரத்தினம், சி. நாகமணி, சி. போகராசா என்பவர்களும் புலோலியைச் சேர்ந்த சி நாகலிங்கம் என்பவரும் சேர்ந்து வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த சின்னத்துரை இவரசா என்பவருக்கு கல்லால் எறிந்து தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

குறித்த திகதிகளில் தொடர்ந்து 8 தவணைகளுக்குச் சமுகமளிக்காத குற்றத்திற்காக அவர்களுக்குத் தலா 300 ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் இவர்களது முந்திய பிணையை ரத்துச்செய்து புதிதாக 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து அடுத்த தவணையை 82 ஜனவரி மாசம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ச)

சாராயம் காய்ச்சிய பெண்ணுக்கு ரூபா 1000 அபராதம்

பண்டத்தரிப்பு

வீட்டில் வைத்து சட்டவிரோதமான முறையில் வடிசாராயம் காய்ச்சியதாகக் குற்றம்சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சூசானம் என்ற பெண் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பெரியவிளானிலுள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக வடிசாராயம் காய்ச்சப்படுவதாக காங்கேசன்துறைப் பொலிசாருக்கு கிடைத்த ரகசியத் தகவல் ஒன்றை அடுத்து காங்கேசன்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு இராசையா, சார்ஜன்ட் திரு எஸ். சுந்தரநாதன் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி அங்கு திடீர் பரிசோதனையில் ஈடுபட்டது.

வீட்டு வளவிலுள்ள கொட்டில் ஒன்றில் வடிசாராயம் காய்ச்சிக்கொண்டிருந்த சூசானம் என்ற பெண்ணை கைது செய்ததுடன், இரண்டு போத்தல் கசிப்பையும் மற்றும் உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினார்கள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு சி. ஆர். ராசசிங்கம் முன்னிலையில் மேற்படி பெண் ஆஜர்செய்யப்பட்டார்.

அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி அவரைக் கடுமையாக எச்சரித்து ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். [ச]

புதிய நடைமுறையில் சீமெந்து விநியோகம்

மாவிட்டபுரம்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாவனையாளர்களுக்கான சீமெந்து விநியோகத்தில் புதிய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாவனையாளர்களுக்கான சீமெந்து விநியோகம் "வேலைசெய்யும் தினத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது.

இங்கு பெறப்படும் சீமெந்தின் அதிகமான பகுதி கள்ளச் சந்தைக்கே போவதாக தெரியவந்துள்ளதையடுத்தே விநியோகத்தில் புதிய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

முன்னர் இவ்விநியோகம் பிரகாரம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பணம்செலுத்தி ஒரு வாரத்திலேயே சீமெந்தை பெறமுடிந்தது. ஆனால் தற்போது 20 நாட்களுக்குமேல் தான் சீமெந்து கிடைப்பதாக கூறப்படுகிறது.

அந்நடைமுறை சீமெந்து விண்ணப்பங்கள் யாவும் நன்கு பரிசீலிக்கப்பட்டு கொடுக்கப்படும்

(6ம் பக்கம் பார்க்க)

சிங்கர் தையல் நிலையம்
வழங்கும் நற்செய்தி ★

யாழ்ப்பாண மக்களின் வசதி கருதி
தினசரி காலை முதல் மாலை வரை தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- தேசிய அலங்கார வேலைப்பாட்டுடன் கூடிய மெசின் தையல்
- டிப்ளோமா வகுப்புக்கள்
- இரண்டு மாத குறுகிய வகுப்புகள்
- இளமங்கையருக்கான நவீன மோஸ்தர் உடை தயாரித்தல்

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான தையல் மீட்டல் வகுப்புக்கள்
மாணவிகளுக்கும் தொழில் பார்க்கும் பெண்களுக்கும்
சனிக்கிழமைகளில் அரை நாள் விடுமுறைகால வகுப்புக்கள்

விபரங்களுக்கு

சிங்கர் ஸ்தாபனம்

(பஸ நிலையத்திற்கு முன்பாக)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கியின் தேசிய அறக்கொடை (பருவமடையாதோர், வயது வந்தோர்) திட்டம்

அது என்ன? யாருக்காக? எப்படிச் செயற்படுகின்றது?

கேள்வி:

இலங்கை வங்கியின் தேசிய அறக்கொடைத் திட்டம் என்று சொல்கிறார்களே, அது என்ன?

பதில்:

மிக இலகுவாக விளக்கிச் சொல்லுவதானால், ஆகக் குறைந்தது ரூ.600/- ஐ ஒரே முறையில் அல்லது மாதாந்தம் ரூ. 25/- வீதம் 21 மாதங்களுக்கு செலுத்தி நடைமுறையிலுள்ள வட்டி வீதங்களுக்கேற்ப, 21 வருடங்களின் பின்னர் ரூ. 39,057/- ஐ பெற்றுக் கொள்ள உதவி செய்யும் திட்டம் தான் இதுவாகும். இதனால்தான் அறக்கொடைத் திட்டம் என்று சொல்லுகிறோம்.

கேள்வி:

ஆகக் குறைந்தது என்ற சொல் ஆகக் கூடியது என்றும் இருக்கிறதோ?

பதில்:

இல்லை. 600 ரூபாவின் பெருக்கங்களாக கூடியதொகையையும் வைப்புச் செய்யலாம் இன்னும் விளக்கமாகச் சொல்லுவதானால் 600 ரூபாவின் இரண்டு மடங்கு, அதாவது 1200 ரூபா, மூன்று மடங்கு அதாவது 1800 ரூபா. இப்படியே 2400 ரூபா 3000 ரூபா என்று கூடிய தொகையை வைப்புச் செய்யலாம்.

கேள்வி:

600 ரூபாவின் இரண்டு மடங்கு, அதாவது 1200 ரூபாவை வைப்புச் செய்தால் 21 வருடங்களில் எவ்வளவு பணம் கிடைக்கும்?

பதில்:

ரூ. 78,115/- கிடைக்கும். ரூ. 2400 ஐ வைப்புச் செய்தால் 21 வருடங்களில் 1,56,231 ரூபா பெற்று லட்சாதிபதியாவார்.

கேள்வி:

600 ரூபாவுக்கு கூடிய தொகைகளையும் 21 மாதாந்தத் தவணைத் திட்டத்தில் செலுத்தலாமா?

பதில்:

நிச்சயமாக முடியும். எந்தத் தொகையையும் மாதாந்தத் தவணை முறையில் செலுத்தலாம். ரூ.1200/-இற்கு மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை ரூ. 50/-, ரூ. 1800/- இற்கு மாதாந்தம் ரூ. 75/-, ரூ. 2400/- இற்கு மாதாந்தம் ரூ. 100/-. தொகை அதிகரிக்க மாதாந்தத் தவணைத் தொகையும் அதிகரிக்கும். தொகையை ஒரே முறையிலோ அல்லது தவணை முறையிலோ வைப்புச் செய்தாலும், 21 வருடங்களின் பின்பு பெறப்போகும் அறக்கொடைத் தொகையில் மாற்றம் இருக்காது. ஒரேயொரு வித்தியாசம் உண்டு. ஒரே முறையில் செலுத்தினால் செலுத்திய தினத்திலிருந்து சரியாக 21 வருடங்களில் அறக்கொடைத் தொகையைப் பெறலாம். தவணை முறையில் செலுத்தினால் கடைசி மாதாந்தத் தவணைப்பணத்தைச் செலுத்திய தினத்திலிருந்து 21 வருடங்களில் பெறலாம். தவணை முறையில் முழுத்தொகையையும் செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது. ரூ. 600/- இற்கான கணக்கிற்கு, மாதாந்தம் ரூ. 25/- வீதம் 21 மாதங்களுக்கு நீங்கள் செலுத்தும் தொகை ரூ. 525/- மட்டுமே.

கேள்வி:

இந்தத் திட்டத்தில் சேருவதற்கு வயதுக் கட்டுப்பாடு உண்டா?

பதில்:

இல்லை. எந்த வயதுக் கட்டுப்பாடும் இல்லை. 16 வயது முடிந்த எவரும் தனது பெயரில் கணக்கை ஆரம்பிக்கலாம். 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் பெயரில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கணக்கை ஆரம்பிக்கலாம்.

கேள்வி:

கணக்கை ஆரம்பிக்கும்போது அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அவசியமா?

பதில்:

தேவையில்லை. ஆனால் 21 வருடங்களின் பின்பு தனக்குரிய அறக்கொடைப் பணத்தைப் பெறும்போது இவை தேவைப்படும்.

கேள்வி:

ஒருவர் எத்தனை கணக்குகளை ஆரம்பிக்கலாம்?

பதில்:

ஒருவர் தனது பெயரிலோ அல்லது மற்றவர் பெயரிலோ எத்தனை கணக்குகளை வேண்டுமானாலும் ஆரம்பிக்க முடியும்.

கேள்வி:

இந்தத் திட்டம் சிறுவர்களுக்கு மிகச் சிறந்தது போலத்தான் தெரிகிறது. ஆனால் வளர்ந்தவர்களுக்கு இதிலுள்ள விசேட பயன் என்ன? அவர்கள் கணக்கொன்றை ஆரம்பித்து விட்டு 21 வருடங்கள் காத்திருக்க வேண்டியது சிறிது அதிகம் போலப்படவில்லையா?

பதில்:

ஆமாம். இது சிறுவர்களின் உயர் கல்வி, சீதனம் போன்றவற்றைச் சமாளிக்க விசேடமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இன்று பிறந்த ஒரு குழந்தையின் பெயரில் 600/- ரூபாக் கணக்கொன்றை இன்றே ஆரம்பித்தால் 21 வயதாகும்போது சுமார் 40,000/- ரூபா ஆயத்தமாக இருக்கும். 2400 ரூபாக் கணக்காக இருந்தால் 21 வயதாகும்போது ஒரு லட்சாதிபதியாகிவிடலாம்.

வளர்ந்தவர்கள் 21 வருடங்கள் காத்திருக்காமல், ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரே முறையில் செலுத்தி கணக்கு முதிர்ச்சியடையும் காலத்தை விரும்பிய அளவு வருடங்களால் குறைத்துக்கொள்ளமுடியும். உதாரணமாக, 600 ரூபாக் கணக்குக்கு ரூபா 11,845.25 சதத்தை ஒரே முறையில் செலுத்தினால் முதிர்ச்சியடையும் காலம் 15 வருடங்களால் குறையும். அதாவது, கணக்கை ஆரம்பித்து 6 வது வருடத்தில் உரிய அறக்கொடைப் பணத்தையும் வேறு நன்மைகளையும் பெறலாம்.

கேள்வி:

இது வளர்ந்தவர்களுக்கு எந்தெந்த வழிகளில் நன்மையளிக்கிறது?

பதில்:

இப்படிப் பார்ப்போம். வேலையிலிருந்து ஒருவர் இளைப்பாறும் போது அவருக்கு ஊழியர் சேமலாபநிதிப் பணம், மற்றும் கொடுப்பனவுகள் கிடைக்கின்றன. அதில் ஒரு பகுதியைச் செலுத்தி, விரும்பிய காலத்தில் அறக்கொடையை பெறக்கூடிய விதத்தில் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம். அக்குறிப்பிட்ட காலத்தில் தனக்குரிய அறக்கொடைப் பணத்தையும் வேறு நன்மைகளையும் பெறலாம்.

கேள்வி:

கடைசியாகக் கிடைக்கும் அறக்கொடைப் பணத்தைத்தவிர வேறு என்ன நன்மைகள்?

பதில்:

நல்லகேள்வி. ரூ. 600/- ற்கான கணக்கொன்று முதிர்ச்சி அடைந்ததும் கிடைக்கும் முழுத்தொகையையும் வங்கியிலேயே விட்டு வைத்தால் மாதாந்தம் 600 ரூபாவைப் பெறலாம். 1200 ரூபாக் கணக்கென்றால் மாதாந்தம் 1200 ரூபா கிடைக்கும். சுருக்கமாகச் சொன்னால் எந்தத் தொகைக்கு கணக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அதே தொகையை மாதாந்தம் பெறலாம். பென்சன் பெற உரித்தில்லாதவர்களுக்கு இதுவே ஒரு பென்சன் தொகையாக ஆகிவிடுகிறது.

கேள்வி:

மாதாந்தம் இப்படிப் பெற்றால் கடைசியாகக் கிடைக்கும் அறக்கொடைத் தொகையில் ஏதும் மாற்றம் ஏற்படுமா?

பதில்:

ஒருபோதும் இல்லை. விரும்பிய காலம் வரை பெறலாம். தேவையான நேரம் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி:

நல்லது. கணக்கொன்றை ஆரம்பித்த பின்பு இடையில் விலகிக் கொள்ளலாமா? அது வரை கட்டிய காசுக்கு என்ன நடக்கும்?

பதில்:

கணக்கை ஆரம்பித்த இரண்டு வருடங்களின் பின்பு கட்டிய காசையும் அதற்குரிய வட்டியையும் பெற்றுக்கொண்டு விலகிக்கொள்ள முடியும். சிறுவர்களுக்கு மற்றுமொரு விசேட நன்மையுண்டு. அவர்கள், 16 வதும் 17வதும் வயதுக்கு இடைப்பட்ட காலத்தில்தமது தேசியஅறக்கொடைக் கணக்கை இலங்கை வங்கியின் தேசிய ஓய்வூதியக் கணக்காக மாற்றிக் கொள்ள முடியும். வேறு கேள்விகள் உண்டா.

கேள்வி:

ஒரேயொரு கேள்வி. தேசிய அறக்கொடைக் கணக்கொன்றை ஆரம்பிப்பது எப்படி?

பதில்:

அருகாமையிலுள்ள இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளரைச் சந்தியுங்கள். உங்களுக்கு வேண்டிய எல்லாத் தகவல்களையும் தந்து கணக்கொன்றை ஆரம்பிக்க உதவி செய்வார். *(1826)*

பணவீக்கத்தினால்ஏற்பட்டநிர்ப்பந்தத்திலும்

மக்கள் மீது வரிப்பழுவைச் சுமத்தாத 'பட்ஜட்'

யாழ். மேயர் பெருமிதம்

(ஏ. கி. மாணிக்கம்)

"பணவீக்கம் காரணமாக எல்லாப் பொருட்களினதும் சேவைகளினதும் செலவுகள் கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் மக்கள் மீது எந்தவிதமான மேலதிக வரிச்சுமையையும் நாங்கள் சுமத்தாது இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது" என்று யாழ்ப்பாண மாநகரசபையின் 1982ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பரிசீலனைக்கும் அங்கீகாரத்துக்குமாக சபையில் சமர்ப்பித்துப் பேசுகையில் மேயர் திரு. இராஜா விசுவநாதன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

"இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினைகளை எதிர்வரும் ஆண்டில் சிரமங்களுக்கு எதிர்கொடுத்து தீர்ப்பதற்கு இன்னொரு தடைப்பிடிக்க வேண்டியதும் அவசியம் என்றும் முதல்வர் வற்புறுத்தினார்.

மன்றத்தின் வரவு செலவுத் திட்டமதிப்பீடுகளை பரிசீலித்து அபிவிருத்திப்பணிகளுக்கான விசேஷ கட்டளைச் சட்டத்தின் கீழ் மாநகரசபையின் முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர் (த. வி. கூட்டணி) 10 பேரும் எதிர்க்கட்சி உறுப்பினர் (தமிழர் காங்கிரஸ்) 5 பேரும் பிரசன்னமாயிருந்தனர். ஆளுங்கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை.

திரு. எஸ். டி. செல்லத்துரை [த. வி. கூட்டணி] அவர்களின் தொடக்கவுரையைத் தொடர்ந்து உரையாற்றினார்.

"இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொதுமக்கள்மீது புதிய வரிச்சுமைகள் எதுவும் சுமத்தப்படவில்லை. இருந்தும் வருமானத்தை பெருக்கும் வகையில் பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள செலவுகளை ஈடுசெய்யும் வகையில் வரிகள் பெறப்படுகின்றன" என்று திரு. செல்லத்துரை பாராட்டினார்.

"தபால்கந்தோர் 3-ம் கட்ட வேலைகள் ஆரம்பிக்க வேண்டியிருப்பதால் யாழ். மாவட்ட எம். பி.யின் பல்நோக்குத் திட்டத்தில் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து 10 இலட்சம் ரூபாவை பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார் திரு. செல்லத்துரை. "அரசாங்கத்தைக் கேட்டோம். அது கைவிரித்துவிட்டது. அபிவிருத்திச் சபையுடனாவது இதனைக் கதைத்து முடிக்க வேண்டும்" என்றார்.

வீதிகள் பற்றி மக்கள் மகிழ்ச்சி

திரு. சோ. சேரனின் [கூட்டணி] மக்களுக்கு வசதிகளை வழங்கும் பாலமாக நிறைவேற்றியிருக்கும் எண்ணம் மகிழ்ச்சியடைகிறோம். ஊழல் தலைவிரித்தாடும் நிர்வாகத்தில் மக்கள் விருப்பத்துக்கேற்ப பாரபட்சமின்றி நிறைவேற்றியுள்ளோம்.

"வீதிகளைப் பற்றி மக்கள் நிறைய கூறி வருகிறார்கள். 10—15 வருடங்களாக சுத்தம் செய்யப்படாமல் இருந்த பாதைகள் இருந்த வடிகால்களை பெருந்தொகையான பணம் செலவு செய்து பூர்த்தி வசதிகளை செய்துள்ளோம்.

"வீதிகளில் பொருத்தப்பட்ட மின்சார விளக்குகளைப் பார்வையிடுவதற்கு மின்சாரசபை ஊழியர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் பல விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. இதனால் மக்கள் முறைப்பாடு செய்கின்றனர். இதனை நிவர்த்திக்க வேண்டும்.

"மின் துண்டிப்புக் காலத்தில் மின்சாரசபை ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் கொடுப்பனவு போதாது. அதனை அதிகரிக்க வேண்டும்.

"மின்சாரசபை, சுகாதாரம், மராமத்துப் பகுதிகளுக்கு பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து பெரும்பகுதி பணம் செலவழிக்கப்படுகின்றது. எங்கே எப்படிச் செலவழிக்கப்படுகின்றது என்பது தெரியவில்லை.

[சபையில் சிரிப்பொலி]

திரு. துரைராஜசிங்கம்: சர்வகலாசாலை மாணவர் தங்கும் நிலையத்துக்கு புதிதாகக் கட்டுவதற்கு நிதிசேரிக்கத்தான் வார்கள் என்று கதைகளில் பார்த்தேன்.

முதல்வர்: அவர்களே எனது வரிப் பணத்தில் அப்பணத்தைச் சேர்க்கும்படி கேட்டேன். அவர்கள் அப்பணத்தைத் தரவில்லை. பணம் சேர்த்ததற்கு அவர்களுக்கு நன்றி.

திரு. துரைராசசிங்கம்: ஊழல் ஒழிக்கப்போகிறோம் என்கிறீர்கள். 400 தரம் இருந்து ஏறி இறங்கியிருப்பேன். ஒன்றும் நடக்கவில்லை. பதிலாவது எங்களுக்கு இதைத் தெரிவித்தால் பதவி பறிபோகும்.

திரு. த. துரைராசா: சில திட்டங்களுக்குக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? மக்கள் பிரதிநிதித்துவத்தோடு நாங்கள் இருந்தோம். ஊழியர்கள் தங்கள் கடமைகளை எடுத்தோம்.

வெள்ளிக்கிழமைகளில் இறைச்சி வெட்டுவதை தவிர்க்கவேண்டும்

— மேயர்

திருமதி சரவணமுத்து: பிரதேசசபை பெருநகர கொன்ரோல் சட்டம் 25ம் திகதியும், 1ம் திகதியும் வெள்ளிக் கிழமைகளில் வருவதால் இறைச்சி வெட்டுவதற்கு அனுமதி தரவேண்டும்.

முதல்வர்: வெள்ளிக்கிழமை எல்லா மதங்களுக்கும் முரிய புனிதநாள் ஆதலால் இதை தவிர்க்கவேண்டும்.

திரு. துரைராஜசிங்கம் (த. வி. கூ.): "சென்ற வரவு செலவுத்திட்டத்தை ஆராய்ந்தேன். அதன் எனது வடிவத்தில் ஒன்றும் நடக்கவில்லை.

மின்சாரம், சுகாதாரம், மராமத்துப் பகுதிகளுக்கு பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து பெரும்பகுதி பணம் செலவழிக்கப்படுள்ளது. எங்கே எப்படிச் செலவழிக்கப்படுகின்றது என்பது தெரியவில்லை.

[சபையில் சிரிப்பொலி]

திரு. துரைராஜசிங்கம்: சர்வகலாசாலை மாணவர் தங்கும் நிலையத்துக்கு புதிதாகக் கட்டுவதற்கு நிதிசேரிக்கத்தான் வார்கள் என்று கதைகளில் பார்த்தேன்.

முதல்வர்: அவர்களே எனது வரிப் பணத்தில் அப்பணத்தைச் சேர்க்கும்படி கேட்டேன். அவர்கள் அப்பணத்தைத் தரவில்லை. பணம் சேர்த்ததற்கு அவர்களுக்கு நன்றி.

திரு. துரைராசசிங்கம்: ஊழல் ஒழிக்கப்போகிறோம் என்கிறீர்கள். 400 தரம் இருந்து ஏறி இறங்கியிருப்பேன். ஒன்றும் நடக்கவில்லை. பதிலாவது எங்களுக்கு இதைத் தெரிவித்தால் பதவி பறிபோகும்.

திரு. த. துரைராசா: சில திட்டங்களுக்குக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? மக்கள் பிரதிநிதித்துவத்தோடு நாங்கள் இருந்தோம். ஊழியர்கள் தங்கள் கடமைகளை

பெரிய கடையில் துர்நாற்றம்

ஜனப் இமாம்: "பெரிய கடைப்பகுதியில் துர்நாற்றம் தாங்கமுடியாத நிலையுள்ளது. இப்பகுதிக் கடிட்டங்களில் பிரதிநிதித்துவம்பிரசாரசபைக்கு வழிவகுக்கவேண்டும்.

"சபைகளிலிருந்து அதேதப் பணம் சேறாவி கடன் அறவிடப்படுவதில்லை.

"மூன்றில் மாலையடிக்கு இரவு நேரங்களில் தான் அமைக்க வேண்டுமென்று சொல்லப்படுகின்றன ஆனால் பிரசாரசபை செய்யும்போது பிரசாரசபை குழுவுக்கு மனு ஒன்று கொடுத்தோம். அனுமதி வழங்கப்பட்டது. மாவடிக் அபிவிருத்திச் சபைத் தேர்தல் கட்டத்தில் போது கடை சென்றோம். இது வரை வரைப்படவில்லை. 82ம் ஆண்டிலாவது இக்கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

"முதல்வர் நல்லவர், ஆனால் ஊழியர்களால் தவறிழைக்கின்றனர்.

"மெசடன் வாக்கெடுப்பில் 'டெண்டர்' மூலம் கடைகள் எடுத்தவர்கள், தாம் அறிவிக்கப்பட்டதைவிட அதிகமாக, சுமார் 2 லட்சம் ரூ. 3 லட்சம் என்று 5-வது பேருக்குக்கூட வசூலிக்கப்படுகிறது. தொழிற்பேட்டை வெளி மாவட்டங்களில் வாழ முடியாமல், வாழ்ப்பாணத்தில் தஞ்சம் புகுந்தவர்களை தான் கடைகளுக்கு அதிக பணம் கொடுத்த வாங்குகிறார்கள்.

ஊழியர் - அங்கத்தவர் பிரச்னை

"மாநகரசபை ஊழியர்களும் - அங்கத்தவர்களும் இடையே பிரச்னைகள் ஏற்படுவதாக, இருதரப்பினருக்கும் மிடையில் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

செய்யவேண்டும்.

"

கல்யாண மண்டபத்தின் நிலை

திரு. தம்பு கதைபவர்: கல்யாண மண்டபத்துக்கு எவ்வளவு பணம் செலவு செய்கிறீர்கள்? அதனால் ஏதும் வருமானம் உண்டா? எத்தனை கல்யாணங்கள் அங்கு நடைபெறுகின்றன? இந்த விதிகள் மக்களுக்குத்தான் செய்கிறோம்" என்றார்.

(உ)

அம்பன் ஆஸ்பத்திரி கொலை: அடையாள அணிவகுப்பு நடத்த நீதிபதி உத்தரவு

(புலோலி

அம்பன் வைத்தியசாலைக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்த அணிவகுப்பில் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களும் இடம் பெறுவார்கள்.

1981 டிசெம்பர் 18ம் திகதி பருத்தித்துறை அம்பன் வைத்தியசாலை வளாகத்துள் புகுந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று அங்கிருந்த நோயாளிகளான சு. புஷ்பராணி, இ. கமலினி ஆகியோரின் தாலிக் கொடி, காப்பு, மோதிரம், தோடு, மணிக்கூடு ஆகியன உட்பட 49070 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக புலிகளைச் சேர்ந்த 5 சந்தேகநபர்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

இச்சந்தேகநபர்களை பருத்தித்துறை பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையான பொலிஸ் சோஷ்டி இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகத் தகுந்தவர்களை சேர்த்த ஐவரையும் கைது செய்தது.

இச்சந்தேகநபர்களை பொலிஸார் பருத்தித்துறை நீதவான் திரு. சே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் சந்தேகநபர்களை 82 ஜனவரி மாதம் 5ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் அன்று இவர்களை அடையாள அணிவகுப்புக்குட்படுத்தி தடயப்பொருள் பரிசோதனை முடிய வசதியாக மன்றில் கொண்டு வந்த ஆஜர்படுத்துமாறும் கொள்ளை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். [உ]

புதிய பயிற்சிநெறி

(உடுப்பிட்டி)

தெல்லிப்பழை மகளிர் தொழிநுட்பப் பீடத்தில் புதிய பயிற்சி நெறிகளுக்குப் புதிய கற்கை மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

கட்டடங்களுக்கு மின் இணைப்புச் செய்தல், மோட்டார் இயந்திரங்கள் ஆகிய பயிற்சிநெறி வகுப்புக்களே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வகுப்புக்களில் பட்டதாரிகளும் வெளியேறிய மாணவர்களும் அனுமதிக்கப் படுவார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

வான் பிரயாணி தவறி விழுந்து படுகாயம்

(மல்லாகம்)

வான் ஒன்றில் பிரயாணம் செய்த இளைஞர் ஒருவர் தவறி விழுந்து பலத்தகாயமடைந்துள்ளார்.

பேராசிரியர் பிரதான வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேராசிரியரின் சகோதரர் சிறிலலு ரவி [வயது 17] என்பவரே தவறி விழுந்து பலத்த காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இளைஞன் மல்லாகம் அரசினர் ஆயுர்வேதவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு மேற்சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார். (அ)

வருடாந்த மஹோற்சவம்

(பண்டத்தரிப்பு

சமுத்து தெற்பரம் எனப்படும் அரசரால் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 31ம் திகதி மற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் தை மாதம் 8-ம் திகதி தேரோட்டமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (உ)

1982-ம் ஆண்டு உங்கள் அனைவருக்கும்
இனிய ஆண்டாக இருக்க எமது வாழ்த்துக்கள்

★ பாடசாலை அப்பியாச கொப்பிகள்

★ உபகரணங்கள்

பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது

(வர்த்தகர்களுக்கு விசேட கழிவு)

★ மின்சார உபகரணங்கள்

★ அலங்கார அன்பளிப்புப் பொருட்கள்

★ காகிதாதிகள் அனைத்துக்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கூட்டுறவுச் சம்மேளனத்தால் உற்சாகமளிக்கப்பட்ட மின்சார ஒப்பந்தகாரரும் - விற்பனையாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8291, தந்தி: 'வாணர்சன்ஸ்'
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக)

தலைமையகம்:

பேர்ள் லிட்ஸ்-அம்பலவாணர் சன்ஸ்,
78, மலிபன்வீதி, கொழும்பு, 11. போன்: 24821 - 28244
லெட்சுமிபவான், 97, ஒல்ஹொட் மாவத்த, கொழும்பு 11.

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி 2-30 6-15 9-30
சிவாஜி-உஷாநந்தினி
மனிதனும் தெய்வமாகலாம்

இவ்வாரம் மகளிர் வாரம்
ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலகாசன் - ஸ்ரீதேவி
நீல மலர்கள்

மடுத்திருவிழா:
தங்குமிடவசதிகள் கோரி விண்ணப்பிக்கலாம்

(உயிலங்குளம்)

அடுத்த ஆண்டு மருதமடுத் திருப்பதியில் நடைபெறவுள்ள திருவிழாக்களில் கலந்துகொள்வதற்கு வீடுகள், குடிசைகள் தேவையான யாத்திரிகர்கள் ஏற்கனவே விண்ணப்பித்து ஒழுங்குகள் செய்து கொள்ளுமாறு மடுப்பதிப் பரிபாலகர் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி 2, மார்ச் 10, 15ம் திகதிகளில் நடைபெறும் விழாக்கள், மே மாத உற்சவம் ஆகிய வற்றில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ம் திகதியில் இருந்தும், ஜூலை மாதம் 2ம் திகதி நடைபெறும் விழாவில் பங்குபற்றுபவர்கள் மே மாதம் 10ம் திகதியில் இருந்தும் விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது. ஆகஸ்ட் 15ம் திகதி செப்டம்பர் 8ம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறும் திருவிழாக்களில் கலந்து கொள்பவர்கள் ஜூன் மாதம் 10ம் திகதியில் இருந்தும், அக்டோபர் முதல் சனியில் நடைபெறும் உற்சவத்திற்கு ஜூலை மாதம் 10ம் திகதியில் இருந்தும் விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்றும் டிசம்பர், 1982 ஜனவரி முதலாம் திகதி நடைபெறும் விழாக்களில் கலந்து கொள்பவர்கள் செப்டம்பர் 10ம் திகதியில் இருந்தும் விண்ணப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
அன்னப் பறவை

வின்சர் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
Greg Morris
STAB
(action Packed)

மனோகரா (காங்கேசன்துறை) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

Windsor Today only
(JAFFNA) Daily 10-30, 2-00, 4-30, 7-00 & 9-30
PETER CUSHING-DONALD PLEASERYPEAin
THE DEVIL'S MEN
பேயின் மனிதர்கள்
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
சமீபகாலத்துள் அதிபயங்கரம்! பேய்கள் மனிதரை ஆட்டிப் படைத்து ஏவல் கொள்ளும் பிரமிப்பு! ஒவ்வொரு இளைஞரையும் பிடித்து, அவர்களின் இரத்தத்தில் மகிழ்ச்சி கொள்ளும் தன்மைப்பேயின் மெய்சிலிர்க்கும் காட்சி! பேய்களை அழிப்பதோடு பேய் பிடித்த மனிதரை அப்பேயின் பிடியிலிருந்து விடுவிக்கப் போராடும் வீரத்துறவியின் தெய்வசக்தியையும், ஓ! உள்ளம் இளைஞனின் துணிவு மிக்க சாகசங்களையும் இன்றே கண்டு அதிசயிக்கத் திரண்டு வாருங்கள்!

From 28
CRAZY BOYS FROM HONGKONG WITH LOVE

ராஜா (யாழ்ப்பாணம்) **சாந்தி** (மட்டுநகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த் ஸ்ரீதேவி சக்கரவர்த்தி லக்ஷமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

கடைசி சில தினங்கள் மட்டும்
றீகல் (யாழ். நகர்) 3-வது வாரம்!
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆரின் வெற்றிப் படைப்பு
"ரகசியப் பொலிஸ் 115"
யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாகக் காண்பிக்கப்படும்.

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30 (காங்கேசன்துறை) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சுஜாதா நடித்த
அந்தமான் காதலி
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி-ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30 2-00, 4-30, 7-00, 9-30
கொழும்பில் 75 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிப்படைப்பு
10
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

சாந்தி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
ஜன நிரல் மத்தியில் 100 நாட்களுக்கு மேல்
பரபரப்புடன் காட்சியளிக்கிறது
குரு
கமல் ... ஸ்ரீதேவி
வண்ணப்படம்...

கள்ளச்சாராயம் விற்றதால்
3 தடவை நீதிமன்றம் வந்த பெண்ணுக்கு தண்டனை

(புலோலி)

சட்டவிரோதமாக சாராயம் விற்ற குற்றத்திற்காக மூன்று தடவையும் நீதிமன்றத்திற்கு வந்த பெண் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 150 ரூபா அபராதம் அல்லது 1½ மாத சிறைத் தண்டனை விதித்தது.

இப்பெண் சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்து கொண்டிருந்தபோது மதுவரிப் பகுதியினரிடம் அகப்பட்டுக் கொண்டமைக்காக மதுவரிப் பகுதியினர் இப்பெண் மீது சட்டவிரோதமாக சாராயம் விற்றதாக குற்றஞ்சாட்டி பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு வே. எம். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அப்பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அத்துடன் சாராயம் விற்ற குற்றத்திற்காக மூன்று தடவையும் தான் நீதிமன்றம் வந்திருப்பதையும் ஒப்புக் கொண்டார்.

நீதவான் எதிரியாகிய பெண்ணுக்கு 150 ரூபா அபராதம் அல்லது 1½ மாத சிறைத் தண்டனை விதித்தார்.

மனைவியுடன் சச்சரவு: கணவன் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

மதுப்பழக்கத்திற்கு அடிமையாக [illegible] சங்கானை [illegible] ஊழியர் ஒருவர் தமது மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து வயல் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

மாதகல் இழுவை வாவியும் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இல்லாலைக் கிளையில் விற்பனையாளராகக் கடமையாற்றுபவருமான கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர் என்பவரே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவார்.

இவரது மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் வித்தியாசியார் முன்னிலையில் நடைபெற்றபோது காலஞ்சென்றவரின் மனைவி குக்குமணி மாணிக்கவாசகர் சாட்சியமளித்தார்.

காலஞ்சென்ற தமது கணவர் அடிக்கடி மது அருந்தும் பழக்கமுடையவர் என்றும் சம்பவதினம் நன்றாக மது அருந்திவிட்டு வந்தபோது வீட்டில் சண்டை தொடங்கினார் இருக்கும்போது இப்படிக் குடித்து வீணாகச் செலவுசெய்ய வேண்டாம் என்று அவருக்கு தான் புத்திமதி கூறியதாகவும் அதைத் தொடர்ந்து அவர் ஏசிவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போனதாகவும் பின்பு அவர் வயல் கிணற்றில் இறந்துகிடப்பதாக அறிந்ததாகவும் தமது சாட்சியத்தில் குக்மணி தெரிவித்தார்.

விசாரணை முடிவில் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். (க)

'வாழ்க்கையை ஒளியுள்ளதாக அமைக்க வேண்டும்'

(காவிட்டபுரம்)

"இயேசுவை ஒளியாக மக்கள் நம்பிய நேரத்தில் நீங்களே ஒளி என மக்களைப் பார்த்துக் கூறியவர் இயேசு. ஆகவே இந்த ஒளிவிழாவின் மூலம் எம்மிடையேயுள்ள ஒளியை நாம் தெரிந்து அறிவுடன் எமது வாழ்க்கையையும் ஒளியுள்ளதாக மாற்ற வேண்டும்."

இவ்வாறு மயிலிட்டி மாரீபு நோய் வைத்தியசாலையில் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட ஒளிவிழாவில் கலந்துரையாற்றிய கண்ணணி முனிதனந்தோனியார் ஆலய குருவான வண. தேவராஜன் அடிகளார் கூறினார்.

திரு. ச. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நோயாளர்களுக்கு 'துவாய்' பெனியன், உணவுப் பண்டங்கள் என்பன வழங்கப்பட்டன.

புதிய...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தொகையிலிருந்து குறைந்த அளவு சீமந்தே சில சமயங்களில் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீமந்துத் தொழிற்சாலையின் மேற்படி சீமந்து விநியோகப் பிரிவில் சீமந்து பாவனையாளர்களை விட சீமந்து வியாபாரிகளே அதிகமாகக் காணப்படுகின்றார்களென்றும், அவர்கள் சீமந்தை கள்ளச் சந்தைக்கு கொண்டுசென்று அதிகவிலைக்கு விற்பதாகவும் கூறப்படுகிறது.

இப்படியான நிலைமை உண்மையாக சீமந்து தேவைப்படுவோர் உரிய காலத்தில் தமக்கு வேண்டிய சீமந்தைப்பெற முடியாமலிருப்பதாகவும், இதனை அவர்கள் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

வாத்தக வரி மீது மீளாய்வு?

(கொழும்பு)

புத்தகங்கள் மீதான வியாபார மொத்த விற்பனைவரி அரசாங்கத்தால் விரைவில் மீளாய்வுசெய்யப்படவிருக்கின்றது.

புத்தக விற்பனையாளர் சங்கத்தினர் இலக்கிய சஞ்சிகைகள் மீதான மொத்த விற்பனைவரி மீது எதிர்ப்புத்தெரிவித்து ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து மேற்படி அறிவிப்பு மீளாய்வுசெய்யப்படவிருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

ஞாயிறு சந்திப்பு

பாரதி நூற்றாண்டுவிழாக்கள் வெகு கோலாகலமாகத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பாரதியின் பிறப்பிடமான எட்டயபுரத்திலே ரூபா 8 லட்சம் செலவில் விழா பந்தல் ஒன்றும் போடப்பட்டுள்ளது.

இவ்வாறு விழாக்கோலம் பூண்டிருக்கும் எட்டயபுரத்திலே பாரதி வாழ்ந்த காலத்தில் பல சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றில் ஒன்றை இங்கு தருகிறோம்.

பாரதி மணம் புரிந்திருந்த காலம் அது. தனது மனைவியுடன் எட்டயபுர வீதிகளில் கைகோர்த்தபடி மாலைவேளைகளில் நடந்து வருவாராம். பாரதி இவ்வாறு கைகோர்த்தபடி உலாவுவதை எட்டயபுர வாசிகள் கண்டு கூச்சமும், ஆத்திரமும் அடைந்தனராம். ஒருவர் பாரதியிடம் "ஏன் இவ்வாறு கைகோர்த்தபடி பெண்ணுடன் திரிகிறீர்" என வினவினராம். இதற்குப் பாரதி "எனது மனைவியுடன் தானே நான் திரிகிறேன். வேறு எப்பெண்ணையும் கூட்டிச் செல்லவில்லையே" எனப் பதிலளித்தாராம். அத்துடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை; மறுநாள் தன் மனைவியைக் கையால் அணைத்தபடி உலாவுவதற்குக் கூட்டிச் சென்றாராம்.

0 0 0

"டொயோட்டோ" என்ற ஜப்பானிய நிறுவனமொன்று அங்கு பணிபுரிவோருக்கு சலுகைகளையும் அளித்துவருகின்றது.

அண்மையில் இந்நிறுவனம் தனது தொழிலாளர்களுக்கு என்று விசேடமாக மயானம் ஒன்றையும் அமைத்துள்ளதாம்.

இதுபற்றித் தெரிவிக்க "டொயோட்டோ" நிறுவன அதிகாரிபொருவர் "நாம் எமது தொழிலாளரின் இன்ப, துன்பங்களிலெல்லாம் பங்கெடுத்து ஒரு குடும்பமாகவே செயல்படுகின்றோம்; எம்மவரில் ஒருவர் இறந்த பின்பும் தனித்து விடாது இருப்பதற்காகவே இவ்வாறு எமக்கென விசேடமாக ஒரு மயானத்தை அமைத்துள்ளோம்" என்றார்.

இவற்றைப் பார்க்கும்போது ஜப்பானியரின் கைத்தொழில் வெற்றிகளுக்கு வெறும் தொழில்நுட்ப அறிவுமட்டும் காரணமல்ல. உரிய பண்புகளும் காரணமாகவே விளங்குகின்றது என்பது தெளிவாகின்றது.

0 0 0

யாழ்ப்பாணத்திலும் கிரிக்கெட்பந்தயத்திடல் அமைக்க விரும்புவதாக கிரிக்கெட் சங்கத்தினரும், அமைச்சருமான திரு காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார். அமைக்க விரும்புவதாகக் கூறியிருக்கும் திடலும் சாதாரண திடலல்ல. அது டெஸ்ட் பந்தயங்கள் ஆடக்கூடியதொன்றாக இருக்குமென விவரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சருக்கு இந்த நல்ல யோசனை எங்கிருந்து தான் தோன்றியதோ? யாழ்ப்பாணத்தில் டெஸ்ட் பந்தயத் திடலை அமைத்து சர்வதேச ஆட்டக்காரர்களை வெல்லும் பார்வையிட சந்தர்ப்பம் அளிக்கவிருக்கும் அமைச்சர், எம்மவரை வெறும் பார்வையாளராக மட்டுமே கருதிவிடக்கூடாது. இடநாட்டைச் சேர்ந்த வீரர்களும் மிகத் திறமையாக்க ஆட்டக்காரர்களே.

எனவே எம்மவருக்கும் டெஸ்ட் பந்தயங்களில் ஆடச் சந்தர்ப்பமளிப்பாராயின், உண்மையிலேயே கிரிக்கெட் சங்கத்தலைவர் பதவிக்கு பூரண தகுதியுடையவர் என்றே கூறலாம்.

...... அனந்த்

இலவசகல்வி, சிகிச்சை, அரிசி மக்களை சோம்பேறியாக்கும்

யாழ். மாவட்டசபைத் தலைவர் கூறுகிறார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் நேரகூட்டுறவுச் சங்கம் கடந்த பதினைந்தாண்டுகளாகக் கட்டுறவுத் துறையில் வளர்ச்சி கண்டு வருவதாகவும் அதன் பரிபாலனத்தை நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட்டு ஓய்வு பெறுவதாகவும் தலைவர் திரு. ந. நடராசா அறிவித்தார்.

சாவகச்சேரி பஸ் நேரகூட்டுறவுச் சங்கத்தின் 10-வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் கூறினார்.

சங்கம் ஒவ்வொரு கூட்டுறவுச் சொசைட்டியை ஏற்றிவைத்து உரையாற்றியபோதே யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட சபைத் தலைவரும் கூறினர்.

பஸ்நேரகூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தேவராசா தலைமையில் நடந்த இவ்விழாவில் மாவட்ட சபைத் தலைவர் சு. நடராசா, சாவகச்சேரி எம். பி திரு. வ. ந. நவரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் வே. நடராசா, சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ. கமலேஸ்வரனும், முன்னாள் நகரசபைத் தலைவர் எஸ். சோதிலிங்கமும், கச்சாய் மத்திய மூலவைவைபவர் திரு. ந. கிருஷ்ணசுவாமி உட்பட பலபிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

திரு நேசதேசன் நேசராசா தொடர்ந்து பேசுகையில்:

தனிமனிதன் செய்யமுடியாத காரியங்களைப் பலர் சேர்ந்து ஒருவருக்காகவும் ஒருவர் பலருக்காகவும் உழைப்பதுதான் கூட்டுறவு. இச்சங்கம் கடந்த பதினைந்தாண்டுகளுக்கு முன்பாக செய்து முடிப்படியாக வளர்ந்து வந்துள்ளது பாராட்டுக்குரியதாகும் என்றும் கூறினார்.

மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு சு. நடராசா பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்கள் அரசாங்க தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் தமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே எனது நோக்கமாகும். இதற்காகவே நான் மாவட்ட சபைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டேன். மாவட்ட சபைக்கு நிதி இல்லை என்கிறார்கள். ஆனால் பொருட்களை முழு வதையும் எம்மிடம் ஒப்படைத்தால் நாம் நிதியை மிச்சம் பிடித்து பொருளாதாரத்தில் முன்னேறலாம். டென்மார்க்கை எடுத்துக் கொண்டால் அது கூட நெதர்லாந்தை விட சிறிய நாடாகும். அந்நாட்டு மக்கள் தொகையை விட குறைவு. நாங்கள் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை தொடங்குவதற்கும் அரசாங்க உதவியும் ஒத்துழைப்பும் தேவை. மத்திய இடங்களில் எல்லாம் அரசாங்கமே தொடங்குகின்றது. இது நிச்சயமாக அப்படியல்ல. பாராளுமன்றம் பிரதிநிதித்துவ முறையில் இச்சபைக்கு நிதி எவ்வளவு உதவிகள் என்றும் கேட்கும்.

உதவி ஆணையாளர் நடராசா பேசுகையில், கூட்டுறவுத் துறையிலிருந்து இலங்கை முழுவதும் இதுவும் ஒன்றென்றும், பணிப்பாளர் ஒருவரும், இருபதிற்கு மேற்பட்ட உறுப்பினர்களினதும், தொழிலாளர்களினதும் சீரிய ஒத்துழைப்பினாலேயே இதனால் வடிவான வளர்ச்சியடைந்துள்ளது என்றும் கூறினார்.

நகரசபைத் தலைவர் திரு. இ. கமலேஸ்வரன் பேசுகையில் இச் சங்கம் கட்டியமைத்த தன்மை தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அதற்கு நகர சபை எவ்வாறான உதவிகளையும் தரும் என்றும் கூறினார். [இ

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வாணிபம்பரம்

பயிற்சி

ஒரு வார காலத்திற்கான பயிற்சி நோட்டோர் மெக்கானிக் பயிற்சி 06-01-82 ஆரம்பமாகிறது. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ் ஜினியரிங் டெக்னொலொஜி 9/1 கராக்கி வீதி, யாழ்ப்பாணம். 1810

தேவை

இலங்கையிலே முதன்முதலாக ஆரம்பித்து வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் கண்ணாடி சூளையில் (Electric Glass Furnace) அனுபவமுள்ள Bottle & Press Machine இயக்குனர் Bottle & Press Machine கொப்பளி மினி இன்ஸ் ஊழியத்திற்குரிய பருளர், கொப்பளி, புனோனி போன்றவர்கள் உடனடியாகத் தேவை சில வெற்றிடங்களே உண்டு. கூடவே முந்தங்கி வேலை பழகுபவர்களும் (Trainees) தேவை. நேரில் வரவும். சேவி இன்ஸ் & மெட்டல் வேர்க்ஸ் நீர்வேலி 1795

அனுபவம் வாய்ந்த மிஷின் ஒட்டு வேலை, பிறிக் சேர் வேலை (Black Smith) வேலைகள் தெரிந்தவர்கள் தேவை வாரியலவை நேரங்களில் தொடர்பு கொள்ளவும். 271, கச்சேரி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் பெண்களை மிஷின் வேலை இடமில்லை. 1832

விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற ஹொண்டா C/90 செல்வி பிரஸ்டோர் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் வீதி C-5, யாழ்ப்பாணம். 1821

புத்தம் புதிய கிருவோ கலர் டெலிவிஷன் National N V 7090. 36 அங்குல பிளாக் (களுபோன்ற ஆபரத்தில் வீட்டில் இருந்து செய்வது) தெகிவளை. தொலைபேசி இலக்கம் 71—3360

1823

விற்பனைக்கு - வட்டி. நிதி நெருக்கடி காரணமாக விரைவாக விற்பனை செய்யவேண்டி ஏழு பரப்பு காணியும் எட்டுப்பரப்பு தென்னையும் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு சு. அருளம்பலம், வலிகாமம் மேற்கு, மானிப்பாய். 1800

நகரத்திலிருந்து மிகவும் நிசப்தமான இடத்தில் 4 பரப்பு வீடு வசதியும் காணி நல்ல தண்ணீருடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: வரணிபுரம், சண்டிலிப்பாய், ஆலயத்தடி வீதி, யாழ்ப்பாணம். [1829]

தெல்லிப்பழை சந்தியிலிருந்து 50 யார் தொலைவில் சாலை ஓரமாக வீட்டில் 11 பரப்புக் காணி இரண்டு வீடுகளுடன் விற்பனைக்குண்டு. நகரமும் தபாலகமும் அருகில் உள்ளது. இலகுவான இலவச மேற்படி வீடு, வலிகாமம் மேற்கு.

[1828]

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் [9] ஒன்பது பரப்பு தென்னந் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. திருமதி துரைராஜம், 71, கோவில் ரோட், கோண்டாவில். தொடர்பு கொள்ளவும். [1830]

நல்ல நிலையில் உள்ள Morris Oxford 8 Sri வகை மூடாத கார் விற்பனைக்குண்டு. 37 கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். [1831

கல்வி

ஆறு வாரங்களில் மிஷின் வேலை தமிழில், சுத்து எலெக்றிஷன் டிப்புளோமா Jaffna Technical School (1956-ம் ஆண்டு பதிவு பெற்றது) 53, டெலிப் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 1824

மிற்சுபிஷி வான் விற்பனைக்கு

1981-ம் ஆண்டு மொடல் (L 300) குளிரூட்டப்பட்ட 8 ஆசனங்கள் கொண்ட பிரயாணிகள் வான் விற்பனைக்குண்டு

றேடியோ, மேல் கரியர் வசதிகள் உண்டு.

3000 கிலோமீட்டர் மட்டுமே பாவிக்கப்பட்டது

தொடர்பு:

பாலச்சந்திரன்,

14/1, அரசாதிபர் ஒழுங்கை,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 661 (1833)

லேத் வேலையாள் தேவை

நீர் இறைக்கும் பம்புகள் கடைந்து இயந்திரங்களுக்கு பூட்டுவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை

எதிர்பார்க்கும் ஊதியத்தை குறித்து எழுத்து மூலம் உடனே விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நன்றி நவிலல்

அமரர் சின்னப்பிள்ளை குழந்தைவேலு

(முன்னாள் படை-யாழ் மத்திய கம்பனி பணிமனை, வல்வெட்டி)

22-12-1981ல் அமரத்துவமெய்தி எம்மை ஆறுதலரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்திற்கு மரணச்சடங்கு இல் பங்கு பற்றியோர்களும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் பல விதங்களில் உதவி புரிந்தவர் களுக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி:

இரத்தினவேல் (யாழ் மத்திய நிலையம்)

மைந்தர்:

இந்திராணி (ஆசிரியை, மத்தெடுத்த இந்துமகளிர் கல்லூரி)

குணேஸ்வரி

மருமக்கள்:

மகேஸ்வரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

செல்வராஜா (கொள்ளவத்தை தொழில்)

சரோஜினிதேவி 1819

யப்பானில் தயாரிக்கப்பட்ட உலகப்பிரசித்தி பெற்ற 'யமஹா' மோட்டார் சைக்கிள்கள்

நத்தார் - புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு விசேஷ கழிவு விலையில் எல்லா மொடல்களும் மார்கழி 31 வரை பெற்றுக்கொள்ளலாம்

3 இலவச சேர்விஸ்கள் 6 மாத உத்தரவாதம் பழுது பார்க்கும் சேவை

மண்ணெண்ணெய் லயிற் இயந்திரங்கள் (Kerosene Power Generators)

40வோல்டில் 65 பல்புகள் எரிவதற்கு உரிய செலவு ரூபா 5/- மட்டுமே

பல விசேஷ அம்சங்கள் உள்ள ஒரேயொரு இயந்திரம் இவையே

வடமாகாண விநியோகஸ்தர்கள்

சிலோன் மேச்சன்ஸ் லிமிட்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 234

த அகடமி ஒவ் சயன்ஸ்

மீசாலை

நடாத்துபவர்:

திரு. பொ. தியாகராசா

[பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்]

வகுப்புகள்: 6, 7, 8, 9, 10

பாடங்கள்: கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்

தொடக்கம்: தை 2, 1982

1817

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்: 7199. யாழ்ப்பாணம் தந்தி: வைரம்.

கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

பகுத்தறிவுமற்ற கல்வி வீண். ஞானம் பிறர் கண்ணீர் துடைக்க நீளும் கரங்களுக்கு புகலிடமாக ஞானத்தை மனிதத்தன்மை ஒளிர்விடும் பிறவியை நடைபெறும்

வரும் ஆறாம் திகதி காலை "நான் கண்ட எதிர்காலம்" என்னும் பொருள் பற்றி கருத்தரங்கு நடைபெறும். (இ

அரசாங்க ஊழியர்களுக்கு முல்லைத்தீவு அரச அதிபர் ஆலோசனை

(தினுஷோன்)

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற ரீதியில் சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் செயற்பட வேண்டும். இதுவே எனது நோக்கமும் ஆகும் இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

முல்லைத்தீவு மாவட்ட புதிய அரசாங்க அதிபர் திரு. சுப்பிரமணியம் சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளை மிழக்கு பிரிவின் பாண்டியன்குளம் பகுதி மக்களால் அரசாங்க அதிபருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. முதலில் புதிய அரசாங்க அதிபரும் முல்லைத்தீவு கச்சேரி உயர் அதிகாரிகளும் பிரதேசவாசிகளும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மங்கள வாத்தியங்கள் முழங்க அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழியில் தோரணம் கட்டி தோரணவாயில் அமைத்து பூரண கும்ப மரியாதை வழங்கி வரவேற்றனர். பின்பு பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் வரவேற்பு கூட்டம் நடைபெற்றது.

அங்கு அரசாங்க அதிபர் பேசுகையில் மேலும் கூறியதாவது;

இந்த நாட்டில் பல பகுதிகளிலும் நான் கடமை புரிந்துள்ளேன். சப்டத்தாளி, மரண செப்பமே எனது முக்கிய விசாரணை அதிகாரி, நீதிபதி வேலை. பல வேலைகளிலும் எனக்கு அதிகபட்ச திருப்தி கிடைத்த நான் மக்களின் சகல பிரச்சினைகளும் நன்கு அறிந்து செயல் படுவேன் என நோக்கம் ஒரு பகுதி மக்களுக்கு சேவை செய்வதன் மூலமே மக்கள் அனைவரும் உதவி வாழ்த்த வேண்டும்.

இவ்விழாவில் பாண்டியன்குளம் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரராசா முல்லைத்தீவு கச்சேரி உயர் அதிகாரிகளும் பாண்டியன்குளம் பகுதி பிரதேசவாசிகளின் பிரதி நிதிகளும் உரை நிகழ்த்தினர்கள். [1]

யாழ் நூலகத்திற்கு நிதி அன்பளிப்பு

(புலோலி

யாழ். பொதுசன நூலகத்திற்கு நிதி திரட்டி வருவதற்குப் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர்கள் இருவர் தமது இரண்டரை மாத ஊதியத்தை உபகரித்தனர்.

யாழ். பொதுசனநூலக புதுக்கட்டிடத்துக்கான நிதி சேகரிப்பில் பருத்தித்துறை மாவட்ட திரு. எஸ். சிவபோதசுந்தரம் அவர்களிடம் திரு. ஆர். இராசதுரை, எஸ். நந்தகுமார், செல்லக்கி, பவானி ஆர். பாலசுப்பிரமணியம், எஸ். ரஞ்சினி ஆகிய இருவரும் தமது இரண்டரை மாத நகர சபை ஆணையாளர் 1500 ரூபாவை மாணவர் மூலம் வழங்கினர். இதனைத் தொடர்ந்து மாணவர் மூலம் வினர் ஆசிரியர்களும் நிதி அன்பளிப்பு செய்தனர்.

பருத்தித்துறை நகரசபை மற்ற சபை உறுப்பினர்களும் இனி வரும் மாதங்களில் தமது ஊதியத்தை நூலகத்திற்கு வழங்கி உதவ முன்வந்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை உறுப்பினர்களான திரு. மு. பொ. வீரவாகு, திரு. சிவ. கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் தமது இரண்டரை மாத நகரசபை ஆணையாளரான 1500 ரூபாவை மாணவர் மூலம் வழங்கினர். இதனைத் தொடர்ந்து மாணவர் மூலம் வினர் ஆசிரியர்களும் நிதி வினர் அன்பளிப்பு செய்தனர். [2]

பெற்றோரின் சம்மதமின்றி மணம் முடித்த இளைஞர் குடும்பகஷ்டத்தால்

நஞ்சுக்குப் பலி!

(மானிப்பாய்)

தனது விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்த 22 வயது மனைவி மீது மனமுடைந்து நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். பண்டத்தரிப்பைச் சேர்ந்த கந்தையா செல்லத்துரை என்பவரே வாலிபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

பெற்றோரது சம்மதத்தையும் பெறாமல் தானாகவே திருமணம் செய்த இந்த வாலிபர் ஒரு மாதம் கஷ்டமடைந்தாராம். வேலை கிடைக்காததாலும் வறுமையும் சேர்ந்து அடிக்கடி தாராளமாக ஏற்படுவதைத்தாங்க முடியாத தாயின் மரணத்தை தழுவினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை அதிகாரி செல்லி எஸ். வைரமய நடத்தினார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ந. தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

நிலமனம் எய்வது இதுவே ஒரு வேடிக்கையான சம்பவமாகும். தமது நிலையை உணராத திருமணம் செய்யும் வாலிபர்கள் ஒழுக்கமற்ற நடத்தை முதலான நிலையில் தற்கொலை செய்து கொள்ளும் போக்கு அதிகரித்து வருவது கவலைக்குரியதாகும். குடும்பவிருத்தி குன்றும் இந்த வேளை தற்கொலைகளும் நிறுத்த முடியாத ஏனெனில் இது ஒரு பாடமாக அமையட்டுமே" என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பையொத்த தெரிவித்தார். சாட்சியாளராக பொலிஸார் சார்ஜன்ட் சுந்தர் செல்வராஜ்.

இழுபறி தொடர்கிறது

உங்கள் வீட்டில் தொலைபேசி இருக்கிறது. எந்த வைத்தும் தொலைபேசி. உங்களின் உறவினர்கள் வெளி நாடுகளில் இருக்கின்றார்கள் எப்போதும் வைத்தும் தொலைபேசி. நீங்கள் அவர்களுடன் தொலைபேசி மூலம் வியாபாரம் செய்து தொடர்பு கொண்டே பேசவேண்டும். ஆனால் தபாற்தந்தி ஐநூறு ரூபாவை முன்னதாகவே நீங்கள் வைப்புப்பணமாகச் செலுத்தியிருக்கவேண்டும். இதுதான் நடைமுறை.

நேற்றுமுன்தினம் யாழ். நகரிலுள்ள ஒருவர், வெளிநாட்டிலுள்ள தனது உறவினருடன் அவசர விஷயமாகப் பேசுவதற்கு தொலைபேசியை "புக்" செய்கின்றார். "ஐநூறு ரூபா வைப்புப் பணத்தை முதலில் செலுத்தி விடுங்கள் நீர்களா" என்று தபாற்தந்தி ஊழியர் கேட்கப்படுகிறது. "ஆம்" என்ற பதிலளித்து, வைப்புப்பணம் செலுத்தப் படுகிறது. பின்பு இலக்கம் போன்ற முழு விபரங்களையும் கொடுக்கின்றார். முன்னரும் நான் பல நாடுகளுக்கு தொலைபேசி அழைப்பு "புக்" செய்ததையும் அவர் நினைவு கூருகின்றார்.

சில நிமிடங்களின் பின்னர் இரு முனைகளிலும் காரசாரமான வாதம் நடக்கிறது. முடிவு என்ன?

உண்மையில் அவர் வைப்புப்பணம் செலுத்தியும் "நீங்கள் வைப்புப்பணம் செலுத்தவேயில்லை" என்று கூறி 'கதை'க்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள்!

இவ்விஷயம் இப்பொழுது மேலிடத்துக்குச் சென்றிருக்கிறது!

— வாலகுமார்

கார்-சைக்கிள் விபத்து:

சாரதி பிணையில் விடுவிக்க ஆணை

(புலோலி)

வல்வெட்டித்துறை கார்-சைக்கிள் விபத்து மரணம் சம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்ட கார்ச்சாரதியை 2500 ரூபா சொந்தப்பிணையில் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இம் மாதம் 15-ம் திகதி வல்வெட்டித்துறை கடற்கரைச் சேர்ந்த நடராசா ரவீந்திரன் என்பவர் தனது காரை பிரதான வீதியில் புறமாகச் செலுத்தியபோது சந்தையிலிருந்து சைக்கிளில் வந்த நபரொருவருடன் கார் மோதிக் கொண்டதால் அந்த நபர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அன்று மரணமானார்.

சாரதி மோட்டார் வாகன அபராதப்பத்திரமின்றி மோதியதில் மிகவேகமாகக் காரை ஓட்டிச் சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டது. இறந்தவரின் மரண விசாரணையை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி பிராங்கிஸ் கார்த்தராசியான சந்தேகநபரை நிபந்தனையின்றி பிணையில் விடுமாறு உத்தரவிட்டார்.

தாலிக்கொடி திருட்டு:

ஒத்திவைக்கப்பட்ட 6 வருடகடுழியம்

(சாவகச்சேரி)

தாலிக்கொடி அபகரித்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 5 வருடகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சரசாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சரஸ்வதி என்பவருடைய 9500 ரூபா பெறுமதியான தாலிக் கொடியை களவுபுரிவதற்காக அரிசி மில்லில் வேலை செய்யும் ஆறுமுகம் சிவசாமி (வயது 17) என்ற இளைஞர் அபகரித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு 5 வருடகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார். [4]

சாரதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"இன்றைய அரசியல் சமூகச் சூழ்நிலைகளுக்கு பாரதியார் எழுதுகோல் உகந்ததாகவே!" என்னும் தலைப்பில் வாசகரும் மன்றமும் கலந்துரையாடும் இடம்பெறுகின்றது.

இன்று இளைஞர் மன்ற கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வதிரி அபிவிருத்தி நிறுவனம் ஆதரவில் யாழ்மாவட்டத் தேயமட்டத்தில் நடத்தும் இளைஞருக்கான கருத்தரங்கு இன்று காலை நிறுவனத் தலைவர் திரு. மு. சிவானந்தராஜா அவர்களின் தலைமையில் வதிரி தமிழ்மன்றக் கேலியத்தில் நடைபெறுகின்றது. இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் உரையாற்றுவர். [தா]

தமிழ்எழுத்தாளர் ஆக்கங்களைப் பாதுகாக்க முடிவு

[உடுவிலிலிருந்து]

தமிழ் எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப் படாதிருக்கும் ஆக்கங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இயக்கத்தலைவர் திரு. ஏ. எஸ். எஸ். திருச்செல்வம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விற்பனைக்கு

81 Sri தொடரில் ஒருவர் பாவிக்கும் HONDA BENLY SUPER மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. கே. தருமராசா. இல: 10, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7230. (1939)

மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் கந்தையா

உடுவில் தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய பிரதம கொத்தார பரிசோதகர் திரு. வைத்திலிங்கம் கந்தையா அவர்கள் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (தொழில் அலுவலகம், அநுராதபுரம்), ஸ்ரீதரன் (இந்தியன் ஒயில்கோ லிமிடெட், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்பு மாமனாருமாவார். அன்னாரது சரமக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (27-12-81) காலை 9 மணிக்கு காரவில்பாம் பிரிவின் வளவுக்கில் நடைபெறும்.

கொப்பிட்டி,
உடுவில்.

1835

மரண அறிவித்தல்

திரு. சபாபதி பரமசாமி

சமரபாகு கற்பிட்டியைச் சேர்ந்த சபாபதி பரமசாமி காலமாகிவிட்டார். இவர் கனகாலிங்கத்தை, வாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியரும், கப்பிரமணியம், சோமசுந்தரம், மகேஸ்வரன், திருமதி குழந்தைவேலு ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக சமரபாகு என்னுமிடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (27-12-81) பிற்பகல் 3-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

சமரபாகு,
வல்வெட்டித்துறை.

1834

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வெலிவேரியே மேற்கு ... அச்சகத்திலே ... சுதந்திரன் வெளியிடப்படுகிறது. Registered as ... 603-ம் இலக்கத்திலுள்ள சான்றிதழின் 1981 ... டிசம்பர் 27-ம் திகதி ... வெளியிடப்படுகிறது. Registered as News Paper. The General P. O. Sri Lanka Regd. No. 160186/81. P. O. Box 160 Jaffna. தொலைபேசி 7707, 8891, 8146.